# கேள்விகளுக்கான அழைப்பு (IFB)

## மாவட்ட செயலகம் - மாத்தறை

## மாத்தறை மாவட்ட செயலகத்திற்கு இரு சக்கர டிராக்டர்களின் பெறுகை

### கேள்வி இல.: P/26/36

தகைமையும் தகுதியும் வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து மாத்தறை, மாவட்ட செயலகத்திற்கு இரு சக்கர டிராக்டர்களின் பெறுகைக்காக முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகளை மாத்தறை, மாவட்ட செயலகம் சார்பில் திணைக்களப் பெறுகைக் குழுவின் தலைவர் கோருகிறார். முழுமையான விபரங்கள் கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. எல்லாக் கேள்விகளுடனும் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான கேள்விப் பிணைமுறியொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| தொகுதி | உருப்படிகளின் விபரம் | அளவு | கேள்விப் பிணைமுறி (ரூபா.) |
|---|---|---|---|
| Lot A | சுழலும் கலப்பையுடன் கூடிய இரு சக்கர கை டிராக்டர் (rotary 8hp) | 18 | 350,000.00 |
| | சுழலும் கலப்பையுடன் கூடிய இரு சக்கர கை டிராக்டர் (rotary 12.5hp) | 01 | |

2. கேள்விமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான கேள்வி நடைமுறையினூடாக இடம்பெறும்.

3. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை மாத்தறை, மாவட்ட செயலகம், கணக்குகள் பிரிவிற்கு 041-2222718 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடிவதோடு, கேள்வி ஆவணங்களை 2026 ஒக்டோபர் 07ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை இலவசமாகப் பரீட்சித்துப்பார்க்கலாம். அத்துடன், இக் கேள்வி ஆவணங்களை http://www.matara.dist.gov.lk எனும் வலையத்தளத்தினூடாகவும் பார்க்க முடியும்.

4. கேள்விதாரர்கள் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் இலங்கை, பொது ஒப்பந்தங்கள் பதிவுத்திணைக்களத்தில் பதிவுபெற்றிருத்தல் வேண்டும். கேள்வியுடன் பதிவுச் சான்றிதழின் (PCA 03) மூலப்பிரதி சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

5. கேள்வி ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை மாத்தறை, மாவட்ட செயலக கணக்காளர் பிரிவில் சிறாப்பரிடம் ரூபா 10,000.00ஐச் செலுத்தி அல்லது Gov Pay நிகழ்நிலைக் கட்டண முறையின் மூலம் மாவட்ட செயலாளரின் பெயரில் உள்ள இலங்கை வங்கியின் கணக்கு இல 7041859ற்கு 2026-09-18ஆம் திகதி தொடக்கம் 2026-10-07ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணிக்குள் செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

6. சமர்ப்பிக்கப்பட வேண்டிய கேள்விப் பிணைமுறித் தொகையானது ரூபா 350,000.00 ஆகும். கேள்விப் பிணைமுறியானது கேள்வி திறக்கப்படும் திகதியான 2026-10-08 முதல் 2027-02-05 வரை செல்லுபடியாகும்.

7. கேள்விகள் பெறப்பட முடிவுசெய்யப்பட்ட இறுதித்திகதி அல்லது ஏதேனும் நீடிக்கப்பட்ட காலப்பகுதி முதல் (91 நாட்கள்) 2027-01-08 வரை செல்லுபடியாகும்.

8. நகல் வடிவில் தயாரிக்கப்பட்ட கேள்விகள் "மூலப்பிரதி, நகல் பிரதி" என்று குறிப்பிடப்பட்ட தனித்தனி உறைகள் ஒரு கடித உறையினுள் இடப்பட வேண்டும். அக் திகதி கடித உறையானது, 2026-10-08ஆம் பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் "தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மாவட்ட செயலகம், மாத்தறை" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் அல்லது மாவட்ட செயலகத்தின் மாவட்ட செயலாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும்.

9. உங்கள் கேள்விகளைக் கொண்ட கடிதஉறையின் மேல் இடது மூலையில் மாத்தறை மாவட்ட செயலகத்திற்கு இரு சக்கர டிராக்டர்களின் பெறுகை என்று குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

10. கேள்விகள் 2026-10-08ஆம் திகதி பி.ப.2.15ற்கு மாத்தறை, மாவட்ட செயலகத்தின் மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் மூடப்பட்டு உடன் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் கேள்விகள் திறக்கப்படாது திருப்பி அனுப்பப்படும்.

11. கேள்வி முன்னோடிக் கூட்டமானது 2026-10-01ஆம் திகதி மு.ப. 10.30 மணியளவில் மாத்தறை, மாவட்ட செயலகத்தின் சிறிய கூட்டமண்டபத்தில் இடம்பெறும்.

12. இப் பெறுகை செயன்முறை தொடர்பிலான திணைக்களப் பெறுகைக் குழுவின் முடிவே இறுதியானதாகும்.

13. இக் கேள்விகளுக்கான அறிவித்தல் தொடர்பில் தேவைப்படும் மேலதிக தகவல்களை மாத்தறை, மாவட்ட செயலக பிரதம கணக்காளருக்கு 041-2222235/041-2222718 எனும் தொ.பே இலக்கத்தினூடாகத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**மாவட்ட செயலகம்,**
**மாத்தறை.**